27.07.2026

O.S.No.284/2017

PW1- Sankari – W/o. Selvaraja

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.07.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. முதல் விசாரணை வாக்குமூலம் ஆங்கிலத்தில் இருப்பதால் கேள்வியை ஆங்கிலத்தில் கேட்கலாமா? தமிழில் கேட்கலாமா? என்றால் தமிழிலே கேட்கலாம்.

2. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரத்தை முழுவதுமாக தமிழில் கூறலாமா என்றால் கருத்துக்களை கூறமுடியும் மொழிபெயர்ப்பு தெரியாது.

3. முதல் விசாரணை வாக்கமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கருத்துக்களை புரிந்துகொண்டு படித்து கையொப்பம் செய்தேன்.

4. அசல் வழக்கு என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்

5. என் கணவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் என் கணவர் இறப்பிற்கு பின் நான் தரப்பினராக சேர்ந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

6. என் கணவர் இறந்த பின் நீதிமன்றத்தில் நான் வாரிசு அடிப்படையில் வழக்கு நடத்த அனுமதி கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன்.

7. என் கணவரின் வாரிசு என்ற அடிப்படையில் தான் நான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான்.

8. என் கணவர் வழக்கிற்கு பின்னிட்டு 10.10.2022 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

9. வழக்கின் 2 வது வாதி என் மாமியார் சண்முகம் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 2 ம் வாதி எப்போது இறந்தார் என்றால் 2020 ம் வருடம் இறந்தார்.

10. 3,4 வாதிகள் எனது அண்ணிகள் என்றால் சரிதான். அவர்களுக்காவும் நான் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான்.

11. என் கணவர் இறந்தபின் வழக்கு நடத்துவதற்காக நான் 3,4 வாதிகளிடம் அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். நான் கூறுவது தவறு என்றும் 3,4 வாதிகளுக்கு தெரியாமல் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

12. 3 ம் வாதி எங்கு உள்ளார் என்றால் திருச்செந்தூரில் உள்ளார்.

13. 4 ம் வாதி எங்கு உள்ளார் என்றால் திருநெல்வேலியில் உள்ளார்.

14. 3,4 வாதிகளை நான் தொடர் சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவர்கள் சூழ்நிலை எனக்கு தெரியவில்லை.

15. ஆணையரை வைத்து விசாரிக்க வசதி உள்ளதா என்றால் இல்லை.

16. என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.1,25,000/-.

17. 3,4 வாதிகள் 1ம் பிரதிவாதியோடு தொடர்பில் உள்ளார்கள் என்றும் 3,4 வாதிகள் இஷ்டமில்லாமல் நான் இவ்வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

18. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதியை செயலாளராக நியமித்ததே தவறு எனவே அதனை ரத்து செய்யக்கோரியும், என் கணவரோடு சேர்ந்து அனைத்து சகோதர, சகோதரிகளும் பள்ளியில் சேர்க்க வேண்டுமெனவும், 1ம் பிரதிவாதி எந்த இடையூறும் செய்யக்கூடாது எனவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதியை செயலாளராக யாரும் நியமிக்கக்கூடாது எனவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

19. என் மாமனார் பெயர் அய்யாச்சாமி என்ற மருதப்பன் ஆசாரி, என் மாமியார் பெயர் சண்முகம் என்றால் சரிதான். அவர்களுக்கு என் கணவர் உட்பட 7 பேர் வாரிசு என்றால் சரிதான்.

20. எனக்கு பள்ளியில் நேரடி உரிமை கிடையாது என்றால் சரிதான் கணவர் மூலம் உரிமை உள்ளது.

21. என் கணவர் இறப்பிற்கு பின் பிராதை சீர்திருத்தம் செய்த போது 3,4,5 வாதிகள், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பள்ளி கூட்டு பாத்தியம் என பரிகாரத்தை சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

22. 2 ,6,7 வாதிகள் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான்.

23. வழக்கு நடத்துவதற்கு நான் அரசிடம் முன் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை.

24. 1ம் பிரதிவாதி செல்லத்துரைக்கு பள்ளியில் எவ்வாறு உரிமை இல்லை என கூறுகிறேன் என்றால் அவருடைய சொத்தை எனக்கு விற்றுவிட்டதால் அவருக்கு உரிமை இல்லை.

25. என் கணவருக்கு செல்லத்துரை விற்ற கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எப்போது கிரையம் கொடுத்தார் என்றால் 2002ம் வருடம் கொடுத்தார்.

26. கடந்த 16.04.2002ம் தேதி என் மாமனார் அய்யாச்சாமியும், செல்லத்துரையும் சேர்ந்து எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணம் என்றால் சரிதான் மேற்படி சொத்தானது அய்யாச்சாமியின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான்.

27. வா.சா.ஆ.3 எழுதிக்கொடுக்கும் போது அய்யாச்சாமி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான்.

28. வா.சா.ஆ.3 எழுதிக்கொடுப்பதற்கு முன்பு அய்யாச்சாமி குடும்பத்தில் எந்த வித பாகமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல முன் ஆவணம் வா.சா.ஆ.1 உள்ளது.

29. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் அது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.
( வாதி தரப்பு வழக்கறிஞர் வா.சா.ஆ 1 ஆனது கிரைய ஒப்பந்தம் எனவும் அதில் எந்த வித மறு பயனோ அனுபவ மாற்றமோ இல்லாததால் பதிவு செய்வது கட்டாயமில்லை என தெரிவித்ததன் அடிப்படையில் வா.சா.ஆ.1 குறித்து வழக்கின் முடிவில் கருத்தில்கொள்ளப்படும் என முடிவு செய்யப்படுகிறது)

30. வா.சா.ஆ.1 ஆவணமானது கிரைய ஆவணம் என்றும் கிரைய ஒப்பந்த ஆவணம் என்பதால் கட்டாயம் பதிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

31. வா.சா.ஆ.1–ன் அடிப்படையில் வா.சா.ஆ.3 ல் எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது எனவும் வா.சா.ஆ.1 சட்டப்படி ஏற்கத்தகாத ஆவணம் என்றால் சரியல்ல.

32. வா.சா.ஆ.1 எழுதும் போது என் மாமனார் உயிருடன் இருந்ததால் வா.சா.ஆ.1 எழுதுவதற்கு மூவருக்கும் எந்த சட்ட அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

33. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் மாமனாரோ, என் கணவரின் மற்ற வாரிசுகளோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல என் மாமனார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்.

34. நான் வழக்கோடு பிரதிவாதிக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்களின் நகல்களில் வா.சா.ஆ.1 நகலில் என் மாமனாரின் கையொப்பம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியால் பெறப்பட்ட ஆவணத்தின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

35. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் அசெதுரை என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

36. 1ம் பிரதிவாதி தமிழில் கையொப்பம் போடமாட்டார் என்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பமானது என் கணவரால் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல.

37. வா.சா.ஆ.1 ஆவணத்தின் 3ம் பக்கத்தில் 5வது வரியில் 2வது, 3வது நபர்கள் வேண்டும்போது 1வது நபர் பள்ளியின் நிர்வாகத்தை ஒப்படைக்க தயாராக இருப்பதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 1ம் பிரதிவாதி பள்ளி நிர்வாகத்தை ஒப்படைத்ததாக கூறவில்லை என்றால் சரிதான்.

38. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் பள்ளி நிர்வாகத்தில் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

39. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் என் கணவர் பள்ளி நிர்வாகத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஆகும்.

40. எனவே வா.சா.ஆ.1ன் அடிப்படையில் என் கணவருக்கு எந்த உரிமையும் வராது என்றால் சரிதான்.

41. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் ஏற்படுத்திய 7 நாட்கள் கழித்து வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

43. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 பங்காக 3 மகன்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டதாக கூறப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் 3ல் 1 பங்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.

44. வா.சா.ஆ.3 ஆவணத்தில் அ.செல்லதுரை என முழுமையாக கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் முன் யோசனையிட்டு கையொப்பம் போட்டார்.

45. வா.சா.ஆ.1 ஆவணத்திலும் என் மாமனார் 3 பங்காக 3 மகன்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டதாக கூறப்படவில்லை என்றால் சரிதான்.

46. வா.சா.ஆ.3 ஆவணத்தில் செல்லத்துரைக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

47. பழங்காலங்களில் பதிவு கிரைய பத்திரங்களில் எழுதிக்கொடுப்பவர் கையொப்பம் மட்டுமே இருக்கும் எனவும் எழுதி வாங்குபவர் கையொப்பம் இருக்காது என்றால் பத்திரம் எழுதும் நபர் கூறியதன் அடிப்படையில் கையொப்பம் செய்திருப்பார்.

48. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதிக்கொடுத்தவர் கையொப்பத்தில் ஒரு நபரின் கைரேகை மட்டுமே உள்ளது என்றால் சரிதான்.

49. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதிக்கொடுத்தவர் கையொப்பத்தில் செல்லத்துரை கைரேகை இல்லை என்றால் சரிதான் ஆனால் கையொப்பம் உள்ளது.

50. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதி வாங்கியவர் என்ற இடத்தில் என் கணவரின் கைரேகை உள்ளது என்றால் சரிதான்.

51. எனவே வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் செல்லத்துரையின் கைரேகை இல்லாததால் செல்லத்துரை எங்களுக்கு எந்த கிரையமும் கொடுக்கவில்லை என்றும் மருதப்ப ஆசாரியே கிரையம் கொடுத்துள்ளதால் 3 ல் 1 பங்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல.

52. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனை தபசில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் 3 தபசில் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது.

53. 3 தபசில் சொத்துக்களில் 3 ல் 1 பங்கு பாத்தியம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

54. பள்ளி நிர்வாகத்தில் 3 ல் 1 பங்கு உள்ளதாகவோ, பள்ளியின் நிர்வாகத்தை மாற்றிவிட்டதாகவே எந்த சங்கதியும் காணப்படவில்லை என்றால் சரிதான்.

55. வா.சா.ஆ.3 ஆவணத்தில் அடிப்படையில் பள்ளியில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் அது சொத்தை பொறுத்ததாகும். வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

56. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள செல்லத்துரை கையொப்பம் இல்லை எனவும் என் கணவரால் போடப்பட்ட கையொப்பம் என்றால் சரியல்ல.

57. வா.சா.ஆ.3–ல் செல்லத்துரை கையொப்பம் இடாததால் வா.சா.ஆ.3 செல்லத்துரையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

58. வா.சா.ஆ.2 ஆவணமானது என் கணவர் அவரது 3 ல் 1 பங்கு சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான்.

59. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பள்ளி நிர்வாகத்தை பொறுத்து எந்த சங்கதிகளும் இல்லை என்றால் சரிதான்.

60. என் மாமனார் 1ம் பிரதிவாதிக்கு 01.01.2000–த்தில் பள்ளி நிர்வாகத்தை மாற்றி கொடுத்தார் என்றால் இல்லை.

61. என்னிடம் காண்பிக்கப்படுவது என் மாமனார் 1ம் பிரதிவாதிக்கு பள்ளி நிர்வாகத்தை பொறுத்து 01.04.2000 த்தில் எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் என்றால் அது மோசடியான ஆவணம் ஆகும்.

62. வா.சா.ஆ.5 ஆவணமானது நான் கல்வித்துறையில் இருந்து தகவல் உரிமையின் கீழ் பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

63. வா.சா.ஆ.5 ஆவணத்தில் பள்ளி நிர்வாகத்தை செல்லத்துரை வசம் நடத்தவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் மோசடியான உயில் ஆவணம். அந்த உயில் ஆவணத்தில் என் மாமியாரும், சின்ன மாமனாரும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

64. வா.சா.ஆ.5 ஆவணத்தில் தற்காலிகமாக பள்ளி நிர்வாகம் ஒப்படைக்கப்படுகிறது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

65. நான் பள்ளி நிர்வாகத்தை தற்காலிகமாக என் வசம் ஒப்படைத்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் உயில் ஆவணத்திற்கு பின் எனக்கு கிரைய ஆவணமாக பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். அந்த பதிவு ஆவணம் தான் வா.சா.ஆ.2,3 ஆகும்.

66. என் கணவர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 1 வருடம் சிறையில் இருந்தார் என்றால் சரியல்ல தடுப்பு காவல் சட்டம் அல்ல விசாரணை கைதியாக 3 மாதம் இருந்தார் .

67. என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்றால் சிலிண்டர் பதுக்கியது காரணமாக கைது செய்யப்பட்டார்.

68. ஒரு கொடூர குற்றம் செய்த நபரோ சிறைக்கு சென்ற நபரோ பிரிவு 12(3) தனியார் பள்ளிகள் சட்டத்தின் கீழ் பள்ளியை நிர்வகிக்க தடை செய்யப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

69. வா.சா.ஆ.5ல் உடனிணைந்த ஆவணத்தில் என் கணவரும் என் கணவரின் சகோதரரான 2ம் பிரதிவாதி, மாமனார், மாமியார் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் அது அவர்களின் கையொப்பம் இல்லை.

70. வா.சா.ஆ.5 என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

71. வா.சா.ஆ.5 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என நான் என் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

72. வா.சா.ஆ.5 ஆவணத்தின் சங்கதிகளில் என் கணவரோ, என் கணவரின் சகோதரரோ பள்ளி நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என குறிப்படப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

73. வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு பின்னிட்டு தான் வா.சா.ஆ.2 உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல இவ்வழக்கு தாக்கல் செய்த பின் வழக்கிற்காக வா.சா.ஆ.5–ஐ 1ம் பிரதிவாதி தயார் செய்துள்ளார்.

74. வா.சா.ஆ.5 ஏற்படுத்தப்பட்டதால் தான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் மாமனார் எனக்கு பள்ளி நிர்வாகத்தை பொறுத்து எந்த அதிகாரமும் வழங்கவில்லை என்றால் சரியல்ல.

75. வா.சா.ஆ.5 போலியாக இருந்திருந்தால் என் கணவருக்கு என் மாமனார் பள்ளியில் நிர்வாகத்தை கொடுத்திருப்பார் என்றால் அது தவறு.

76. செல்லத்துரை எப்போது பள்ளியின் நிர்வாகியாக இருந்தார் என்றால் 1வருடம் மட்டுமே என் மாமனார் பள்ளியின் நிர்வாகியாக நியமித்தார். எந்த கால கட்டம் என்றால் 2001 ம் வருடம் நியமித்தார் ஆனால் அதிகாரிகளை சரிகட்டி 2017 வரை நிர்வாகியாக இருந்தார்.

77. என் கணவர் எந்த கால கட்டத்திலும் பள்ளியில் செயலாளராக நிர்வாகிக்கவில்லை என்றால் சரிதான்.

78. என் கணவரின் உடன் பிறந்த 4 பெண்கள் 1ம் பிரதிவாதி செயலாளராக இருந்ததை நீக்கம் செய்ய எந்த ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

79. 1ம் பிரதிவாதி செயலாளராக நிர்வாகம் செய்த போது நான் பள்ளியில் நிர்வாக குழுவில் உறுப்பினராக இருந்தேன் என்றால் சரியல்ல.

80. தற்போது எங்கள் பள்ளி ஈராசிரியர் பள்ளி என்றால் சரிதான்.

81. தற்போது பள்ளியில் தலைமையாசிரியர் 2ம் பிரதிவாதி என்றால்

சரிதான்.

82. மற்றொரு ஆசிரியர் வேறு பள்ளிக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

83. 2ம் பிரதிவாதி, மற்றொரு ஆசிரியரான விஜயராணி மற்றும் நானும் வழக்கு தாக்கல் செய்யும் போது பள்ளியில் ஆசிரியராக இருந்தோம் என்றால் சரிதான்.

84. வா.சா.ஆ.5 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்ட முதல் கேள்வியில் செல்லத்துரை தபசில் பள்ளியில் செயலாளராக பணிபுரிந்ததை ஒப்புக்கொண்டு கேள்வி கேட்கப்பட்டது என்றால் சரிதான்.

85. விதி 8 தமிழ்நாடு குடிமைப் பணிகள் விதிகளின் படி நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு பள்ளியில் செயலாளராக நிர்வாகம் செய்ய அனுமதி பெற்றேனா என்றால் பெற்றுள்ளேன். நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல .

86. வா.சா.ஆ.4–ல் 2வது பக்கத்தில் உள்ள கையொப்பம் என் கணவருடையது என்றால் சரிதான்.

87. வா.சா.ஆ.4 ஆவணத்தில் என் கணவர் செல்வராஜா 01.04.2002 முதல் முகவராக செயல்பட அனுமதிகேட்டு கொடுத்த விண்ணப்பம் என்றால் சரிதான்.

88. வா.சா.ஆ.4 ல் முதல் பகுதியில் என் கணவர் 13.05.2002 முதல்

முகவராக செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

89. வா.சா.ஆ.4 ல் உள்ள 1 ம் பிரதிவாதியின் கையொப்பம் என் கணவரால் போடப்பட்டது என்றும் வா.சா.ஆ.4 போலியான ஆவணம் என்பதால் தான் என் கணவர் பெயருக்கு நிர்வாகத்தை மாற்றிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

90. வா.சா.ஆ.4 ல் 6,7,8 பக்கத்தில் உள்ள சங்கரி என்ற கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான்.

91. வா.சா.ஆ.4 ஏற்படுத்திய காலத்தில் செல்லதுரை தான் பள்ளியில் செயலாளராக இருந்து வந்தார் என்றால் சரிதான்.

92. பொதுவாக தனியார் பள்ளி சட்ட திட்ட விதிகளின் படி கூட்டம் கூட்ட வேண்டும் என்றால் தலைவர் மற்றும் செயலருக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என்றால் சரிதான். எனவே வாசா.ஆ.4 ஆவண காலத்தில் ஏற்படுத்திய கூட்டம் சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

94. என் கணவர் 2011 ம் வருடம் மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிப்பேராணை 11818/2011 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

95. நீதிப்பேராணை 11818/2011 கடந்த 21.01.2013 ல் செல்லதுரைக்கு பள்ளி நிர்வாகத்தை ஒப்படைக்ககூடாது என மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் உரிமையியல் நீதிமன்றத்தை நாடுமாறு முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

96. ஆனால் இவ்வழக்கானது 03.10.2017ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 4 வருடம் காலதாமதமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் என் வழக்கு காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

97. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆவணம் இவ்வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் இல்லை என்பதால் வா.சா.ஆ.7,8 ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

98. வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் வா.சா.ஆ.9,10 ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

99. வா.சா.ஆ.10 ஆவணத்தில் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதால் கண்டிப்பாக பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

100. வா.சா.ஆ.10ன் படி இவ்வழக்கு பண அதிகார வரம்பு மீறி இருப்பதால் இந்நீதிமன்றத்தால் விசாரிக்க இயலாது என்றால் சரியல்ல.

101. வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஆவணங்களானது இவ்வழக்கிற்காக 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக போடடப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

102. வா.சா.ஆ.9,10 ஆவணங்களில் செல்லதுரையின் கையொப்பம் வித்தியாசமாக உள்ளது எடுத்த எடுப்பிலேயே தெரியவருவதால் மேேற்டிப

ஆவணங்களை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

103. 1ம் பிரதிவாதி எப்போது ஆங்கிலத்தில தான் கையொப்பம் இடுவார் என்றும் தமிழில் உள்ள கையொப்பம் என் கணவரால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

104. 7ம் வாதி என் சொந்த மகன் இல்லை என்றால் சரியல்ல.

105. 7ம் வாதி நான் தத்தெடுத்த பையன் என்றால் சரியல்ல.

106. 7ம் வாதி சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால் பள்ளி நிர்வாகத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

107. 7ம் வாதி என்னுடைய சொந்த மகன் இல்லை என்றும் ஆசிரமத்தில் தத்தெடுத்தேன் என்றால் சரியல்ல.

108. என் ஆவணங்கள் இவ்வழக்கின் உரிமையை காட்டாததாலும், காலவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி